# පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය

# பொலிஸ் ஊடகப் பிரிவு

# POLICE MEDIA DIVISION

14 වන මහල,සුහුරුපාය,බත්තරමුල්ල

| දිනය Date | 2026.07.17 පැය 0550 | දුරකථන අංකය Tel.NO | 011-2887973 | මගේ අංකය My NO | D/Media/Out/1165/2026 | විද්‍යුත් ලිපිනය E-Mails | dir.media@police.gov.lk |
|---|---|---|---|---|---|---|---|


**<u>පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය වෙත වාර්තා වූ වැදගත් තොරතුරු.</u>**

***பொலிஸ் ஊடகப் பிரிவிற்கு பதிவான முக்கிய தகவல்கள்***

## 01. වෙඩි තබා මනුෂ්‍ය ඝාතනයක් - නවගමුව පොලිස් වසම.

2026.07.16 දින රාත්‍රී නවගමුව පොලිස් වසමේ කොරතොට ප්‍රදේශයේදී සිදුකල වෙඩි තැබීමකින් තුවාල ලැබූ පුද්ගලයෙකු නවගමුව රෝහලට ඇතුලත් කර වැඩිදුර ප්‍රතිකාර සඳහා හෝමාගම රෝහල වෙත මාරුකර යවා ප්‍රතිකාර ලබමින් සිටියදී මියගොස් ඇත.

**මරණකරු අවුරුදු 26 ක් වූ කඩුවෙල ප්‍රදේශයේ පදිංචිකරුවෙකි.**

සැකකරුවන් සම්බන්ධව මෙතෙක් තොරතුරු අනාවරණය වී නොමැති අතර වෙඩි තැබීම සඳහා පිස්තෝල අවියක් භාවිතා කර ඇති බවට පොලිසිය සැක කරනු ලබයි. සැකකරුවන් අත්අඩංගුවට ගැනීම සඳහා නවගමුව පොලිසිය විසින් වැඩිදුර විමර්ශන සිදු කරනු ලබයි.

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொலை – நவகமுவ பொலிஸ் பிரிவு

*2026.07.16 அன்று இரவு நவகமுவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொரதொட்ட பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் நவகமுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.*

***உயிரிழந்தவர் 26 வயதுடைய கடுவெல பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.***

*சந்தேகநபர்கள் தொடர்பான தகவல்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. இத் துப்பாக்கிச் சூட்டில் கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காக நவகமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

**02.** **මනුෂ්‍ය ඝාතනයක් - හෝමාගම පොලිස් වසම.**

2026.07.16 වන දින උදෑසන හෝමාගම පොලිස් වසමේ සිංහඅරණ මාර්ගයේ ඇළ මාර්ගයක් ආසන්නයේ නාඳුනන මළ සිරුරක් ඇති බවට හෝමාගම පොලිස් ස්ථානය වෙත ලද පණිවිඩයක් මත විමර්ශන ආරම්භ කර ඇත.

**මරණකරු අවුරුදු 41 ක් වූ පිටිපන, හෝමාගම ප්‍රදේශයේ පදිංචිකරුවෙකි.**

මහේස්ත්‍රාත් පරික්ෂණයෙන් පසු හෝමාගම රෝහලේදී සිදුකරන ලද පශ්චාත් මරණ පරීක්ෂණයේදී, මෙම මරණය ගෙල කපා සිදු කරන ලද මනුෂ්‍ය ඝාතනයක් බවට අනාවරණය වී ඇත. මරණකරු 2026.07.15 දින රාත්‍රී යතුරුපැදියෙන් කුලී ගමනක් ගොස් සිටියදී මෙම ඝාතනය සිදුව ඇත. මරණකරුගේ යතුරුපැදිය, රන් මාලයක්, ජංගම දුරකථනය හා මුදල් පසුම්බිය සැකකරුවන් විසින් කොල්ලකා පලාගොස් ඇත.

සැකකරුවන් හඳුනාගෙන නොමැති අතර ඔවුන් අත්අඩංගුවට ගැනීම සඳහා හෝමාගම විසින් වැඩිදුර විමර්ශන සිදු කරනු ලබයි.

*கொலைச் சம்பவம் – ஹோமாகம பொலிஸ் பிரிவு*

*2026.07.16 அன்று காலை ஹோமாகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சிங்கஅரண வீதியிலுள்ள கால்வாயொன்றின் அருகே அடையாளம் தெரியாத சடலம் இருப்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் ஹோமாகம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.*

*உயிரிழந்தவர் 41 வயதுடைய ஹோமாகம, பிட்டிபன பகுதியைச் சேர்ந்தவர் என்பது பின்னர் அடையாளம் காணப்பட்டது.*

*நீதவான் விசாரணைக்குப் பின்னர் ஹோமாகம வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேதப் பரிசோதனையில், கழுத்து அறுக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கொலை என உறுதி செய்யப்பட்டுள்ளது.*

*உயிரிழந்தவர் 2026.07.15 அன்று இரவு மோட்டார் சைக்கிளில் வாடகைப் பயணம் மேற்கொண்டிருந்தபோது இக்கொலை இடம்பெற்றுள்ளது. அவரது மோட்டார் சைக்கிள், தங்கச் சங்கிலி, கைப்பேசி மற்றும் பணப்பை ஆகியவற்றை சந்தேகநபர்கள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.*

*சந்தேகநபர்கள் இதுவரை அடையாளம் காணப்படாத நிலையில், அவர்களைக் கைது செய்வதற்காக ஹோமாகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.*

**03.** **ජීව අත්බෝම්බ 02 ක් සහ ජීව පතරොම් සමඟ සැකකරුවෙකු අත්අඩංගුවට - කොළඹ දිසා අපරාධ කොට්ඨාසය.**

2026.07.16 දින රාත්‍රී යක්කල පොලිස් වසමේදී කොළඹ දිසා අපරාධ කොට්ඨාසයේ නිලධාරීන් කණ්ඩායමක් විසින් ලද තොරතුරක් මත වැටලීමක්

සිදුකර විදේශ රටක නිෂ්පාදිත ජීව අත්බෝම්බ **02 ක්, පිස්තෝල පතරොම් 32 ක්, එම් 16 අවියේ පතරොම් ගැබක්, එම පතරොම් 11 ක්, රිවෝල්වර් පතරොම් 06 ක් සහ තීරු බදු රහිතව මෙරටට රැගෙන එන ලද දුම්වැටි 34,000 ක් සමඟ සැකකරුවෙකු** අත්අඩංගුවට ගෙන ඇත.

**සැකකරු අවුරුදු 42 ක් වන රාගම ප්‍රදේශයේ පදිංචිකරුවෙකි.**

කොළඹ දිසා අපරාධ කොට්ඨාසය විසින් වැඩිදුර විමර්ශන සිදු කරනු ලබයි.

***இரண்டு செயற்பாட்டு கைக்குண்டுகள் மற்றும் உயிருடன் செயல்படும் தோட்டாக்களுடன் சந்தேகநபர் கைது – கொழும்பு பிராந்திய குற்றவியல் விசாரணைப் பிரிவு***

*2026.07.16 அன்று இரவு யக்கல பொலிஸ் பிரிவில், கொழும்பு பிராந்திய குற்றவியல் விசாரணைப் பிரிவின் அதிகாரிகள் குழு மேற்கொண்ட சுற்றிவளைப்பில், வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட இரண்டு உயிருடன் செயல்படும் கைக்குண்டுகள், 32 கைத்துப்பாக்கி தோட்டாக்கள், எம்-16 துப்பாக்கிக்கான ஒரு தோட்டா மகசின், அதற்கான 11 தோட்டாக்கள், 6 ரிவோல்வர் தோட்டாக்கள் மற்றும் வரியில்லாமல் நாட்டிற்குள் கொண்டுவரப்பட்ட 34,000 சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேகநபர் 42 வயதுடைய ராகம பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.*

*இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொழும்பு பிராந்திய குற்றவியல் விசாரணைப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.*

**04. අයිස් මත්ද්‍රව්‍ය හා හෙරොයින් සමඟ සැකකරුවෙකු අත්අඩංගුවට - ගල්කිස්ස පොලිස් ස්ථානය.**

2026.07.16 දින සවස ගල්කිස්ස පොලිස් වසමේ බොරුපන ප්‍රදේශයේදී ගල්කිස්ස පොලිස් ස්ථානයේ නිලධාරීන් කණ්ඩායමක් විසින් ලද තොරතුරක් මත වැටලීමක් සිදුකර **අයිස් මත්ද්‍රව්‍ය ග්‍රෑම් 671 ක් සහ හෙරොයින් ග්‍රෑම් 20 ක් සන්තකයේ තබාගෙන යතුරුපැදියකින් ගමන් කරමින් පුද්ගලයෙකු යතුරුපැදිය ද සමඟ** අත්අඩංගුවට ගෙන ඇත.

**සැකකරු අවුරුදු 37 ක් වන මඩපාත ප්‍රදේශයේ පදිංචිකරුවෙකි.**

ගල්කිස්ස පොලිසිය විසින් වැඩිදුර විමර්ශන සිදු කරනු ලබයි.

***'ஐஸ்' போதைப்பொருள் மற்றும் ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது – கல்கிசை பொலிஸ் நிலையம்.***

*2026.07.16 அன்று மாலை கல்கிசை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொருபன பகுதியில், கல்கிசை பொலிஸ் நிலைய அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், 671 கிராம் 'ஐஸ்' போதைப்பொருளும் 20 கிராம் ஹெரோயினும் வைத்திருந்த ஒருவர், அவர் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேகநபர் 37 வயதுடைய மடபாத பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.*

*மேலதிக விசாரணைகளை கல்கிசை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

**05. හෂීෂ් මත්ද්‍රව්‍ය සමඟ සැකකරුවෙකු අත්අඩංගුවට - කොළඹ දිසා අපරාධ කොට්ඨාසය.**

2026.07.16 දින රාත්‍රී ග්‍රෑන්ඩ්පාස් පොලිස් වසමේ ෆර්ගියුෂන් පාර ප්‍රදේශයේදී කොළඹ දිසා අපරාධ කොට්ඨාසයේ නිලධාරීන් කණ්ඩායමක් විසින් ලද තොරතුරක් මත වැටලීමක් සිදුකර **හෂීෂ් මත්ද්‍රව්‍ය ග්‍රෑම් 100 ක් සමඟ සැකකරුවෙකු** අත්අඩංගුවට ගෙන ඇත.

**සැකකරු අවුරුදු 54 ක් වන කොළඹ 14 ප්‍රදේශයේ පදිංචිකරුවෙකි.**

කොළඹ දිසා අපරාධ කොට්ඨාසය විසින් වැඩිදුර විමර්ශන සිදු කරනු ලබයි.

**පොලිස් මාධ්‍ය කොට්ඨාසය.**

***ஹஷீஷ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைது – கொழும்பு பிராந்திய குற்றப் பிரிவு***

*2026.07.16 அன்று இரவு கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பெர்குசன் வீதியில், கொழும்பு பிராந்திய குற்றப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பில், 100 கிராம் ஹஷீஷ் போதைப்பொருளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*சந்தேகநபர் 54 வயதுடைய கொழும்பு 14 பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.*

*மேலதிக விசாரணைகளை கொழும்பு பிராந்திய குற்றப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.*

***பொலிஸ் ஊடகப் பிரிவு.***